திராவிடத்தின் ஒளிவிளக்கு – தமிழ்நாட்டின் விடியல் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின்

தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் சங்கரன் கோவிலில் சங்கமித்த வீரத் தமிழர் கூட்டம் காணீர்!

‘மோடிஜி, Where Is LPG?’ என்று கேட்கும் மக்களுக்குப் பிரதமரின் பதில் என்ன?

தமிழ்நாட்டில் மும்மொழிக் கொள்கையை அமல்படுத்துவோம் என பிரச்சாரம் செய்யும் தைரியம் NDA-வுக்கு இருக்கிறதா?

சங்கரன்கோவில் பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி!

சங்கரன்கோவில், ஏப். 6–

‘மோடிஜி, Where Is LPG?’ என்று கேட்கும் மக்களுக்குப் பிரதமரின் பதில் என்ன? என்றும், தமிழ்நாட்டில் மும்மொழிக் கொள்கையை அமல்படுத்துவோம் என்று சொல்லி பிரச்சாரம் செய்யும் தைரியம் NDA-வுக்கு இருக்கிறதா? எனவும், சங்கரன்கோவில் பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (04-04-2026) சங்கரன்கோவிலில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:

அந்நிய ஆதிக்கத்திற்கு தலைகுனிய மாட்டோம் என்று விடுதலைப் போராட்டத்திற்கு வித்திட்ட, மாவீரர் பூலித்தேவரும், உயிரையே துச்சமாக நினைத்து செயல்பட்ட தளபதி ஒண்டிவீரனும் வாழ்ந்த மண்ணில், தமிழ்நாட்டைத் தலைகுனிய விடக் கூடாது என்று சொல்வதற்காக தமிழ்நாட்டை தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்வதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவைக் கேட்டு உங்களிடம் நான் வந்திருக்கிறேன்.

கழகம் மீண்டும் ஆட்சியில் அமர நம் வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வீர்!

ஏழாவது முறையும் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் அமர வேண்டும்; திராவிட மாடல் 2.0-வில் தமிழ்நாடு புதிய உயரங்களை அடைய வேண்டும் என்று உங்களிடத்தில் வாக்கு கேட்டு வந்திருக்கிறேன். திராவிட மாடல் 2.0-வுக்கு நான் ரெடி? நீங்கள் ரெடியா? ரெடி (மக்கள்). அதற்கு இந்த மேடையில் நிற்கும் வேட்பாளர்களை வெற்றி பெற வைக்க வேண்டும். அதற்கு நீங்கள் தயாரா? தயார் (மக்கள்).

முதலில், வாசுதேவநல்லூர் தொகுதியில் போட்டியிடும் நம்முடைய வெல்லும் வேட்பாளர் மாவட்டச் செயலாளர் தம்பி ஈ. ராஜா அவர்கள். இளைஞரணியில் இருந்து வளர்ந்து, இன்று மாவட்டச் செயலாளராக உயர்ந்திருக்கிறார். சங்கரன்கோவில் எம்.எல்.ஏ.-வாக சிறப்பாகப் பணியாற்றியவர். சங்கரன்கோவிலுக்கு பல்வேறு திட்டங்களை வாங்கித் தந்தது போன்று, வாசுதேவநல்லூருக்கும் நிச்சயம் வாங்கித் தருவார். தம்பி ராஜாவுக்கு வாசுதேவநல்லூர் மக்கள் உதயசூரியன் சின்னத்தில் உங்கள் பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும்.

அடுத்து, தென்காசித் தொகுதியில் நம்முடைய வெல்லும் வேட்பாளர் தம்பி கலை கதிரவன் அவர்கள். பல ஆண்டு காலமாக என்னுடைய நிழலாக பணியாற்றி வரும் இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலையின் மகன்தான் கலை கதிரவன். மருத்துவம் படித்து டாக்டராக பணியாற்றி, இப்போது மக்கள் பணிக்காக வந்திருக்கிறார். தம்பி கலை கதிரவனுக்கு உதயசூரியன் சின்னத்தில் உங்கள் பொன்னான வாக்குகளை நீங்கள் அளிக்க வேண்டும்.

அடுத்து, ஆலங்குளம் தொகுதியில் நம்முடைய வெல்லும் வேட்பாளர் வழக்கறிஞர் அருமைச் சகோதரர் மனோஜ் பாண்டியன் அவர்கள். முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் பெருமதிப்பிற்குரிய பி.எச். பாண்டியன் அவர்களின் அன்பு மகன்! இரண்டு முறை எம்.எல்.ஏ! மாநிலங்களவை உறுப்பினர்! எப்போதும் தொகுதி மக்களுக்காக உழைப்பவர்! மனோஜ் அவர்களுக்கு, உதயசூரியன் சின்னத்தில் உங்கள் பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும்.

அடுத்து, கடையநல்லூர் தொகுதியில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நம்முடைய வெல்லும் வேட்பாளர் தி.மு. ராஜேந்திரன் அவர்கள். மாணவர் தி.மு.க.வில் போராட்டக் குணத்துடன் வளர்ந்தவர். தென் மாவட்டத்தில் அண்ணன் வைகோ அவர்களின் அன்பைப் பெற்றவர்! மறுமலர்ச்சி தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர்! முப்பது ஆண்டுகள் மக்கள் பிரச்சினைகளுக்காக போராடியவர்! கொள்கை தோழமையான தி.மு. ராஜேந்திரன் அவர்களுக்கு, உதயசூரியன் சின்னத்தில் உங்கள் பொன்னான வாக்குகளை நீங்கள் அளிக்க வேண்டும்.

அடுத்து, சங்கரன்கோவில் தொகுதியில் காங்கிரஸ் பேரியக்கத்தின் வேட்பாளர் அருமைச் சகோதரர் ராகுல் காந்தி அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கும் கணேசன் அவர்கள். முன்னாள் ஒன்றிய அமைச்சர் அருணாசலம் அவர்களின் தம்பி மகன் தான் அவர்! மாணவராக இருந்தபோதே மக்கள் பணியில் ஈடுபட்ட இவர், இன்று சங்கரன்கோவில் வேட்பாளராக வந்திருக்கிறார்! கணேசன் அவர்களுக்கு கை சின்னத்தில் உங்கள் பொன்னான வாக்குகளை நீங்கள் எல்லாம் அளிக்க வேண்டும்.

தென்காசி மாவட்டத்தில் 5 வேட்பாளர்களும் வென்றாக வேண்டும்!

தென்காசி மாவட்ட மக்கள் இந்த ஐந்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெற வைப்பீர்களா? வைப்போம் (மக்கள்). வெற்றி உறுதியா? உறுதி (மக்கள்). வெற்றி உறுதி என்று சொல்லிவிட்டார்கள். வேட்பாளர்கள் இப்போது உட்காரலாம்.

இன்றைக்கு, நாங்கள் கொள்கைக் கூட்டணியோடு வந்து வாக்கு கேட்கிறோம். இன்னொரு பக்கம், பா.ஜ.க.வும் - அ.தி.மு.க.வும் உங்களிடம் வாக்கு கேட்டு வருகிறார்கள். ஆனால், அவர்களால் தமிழ்நாட்டிற்கும் - தமிழ்நாட்டு மக்களுக்கும் என்னென்ன நன்மைகள் செய்திருக்கிறார்கள் என்று ஏதாவது சொல்ல முடிகிறதா?

வார்டு கவுன்சிலருக்குக் கூட பழனிசாமி தகுதியில்லை என்றார் அன்புமணி!

எந்தக் கொள்கையை அடிப்படையாக வைத்து கூட்டணி அமைத்திருக்கிறார்கள் என்று வெளிப்படையாகச் சொல்ல முடியாத நிலை இன்றைக்கு அவர்களுக்கு! கூட்டணியாக இருந்தாலும் அதில் பல பேர் பழனிசாமியை ஏற்றுக் கொள்ள மாட்டோம்; N.D.A.தான் எங்கள் முகம் என்று சொல்கிறார்கள்!

அந்தக் கூட்டணியின் இலட்சணத்தை சொல்கிறேன் பாருங்கள். “பழனிசாமி அவர்கள் ஒரு வார்டு கவுன்சிலர் ஆவதற்குகூட தகுதியில்லாதவர்” என்று அந்தக் கூட்டணியில் இருக்கும், அன்புமணி சொன்னார். அவர் இன்னும் நிறைய சொன்னார். நாகரிகம் கருதி அதையெல்லாம் நான் இந்த மேடையில் சொல்ல விரும்பவில்லை.

அதேபோன்று, பழனிசாமியின் திடீர் பங்காளியாகக் கூட்டு வைத்திருக்கும் டி.டி.வி. தினகரன் அவர்கள், “பழனிசாமியுடன் கூட்டணி வைப்பதை, நான் விரும்பவில்லை. வெட்கப்படுகிறேன், வேதனைப் படுகிறேன். அதைவிட தூக்கில் தொங்கிவிடுவோம்” என்று சொன்னார்.

பா.ஜ.க.வில் இருப்பவர்கள் இன்னும் மோசமாகப் பேசினார்கள். இத்தனை முரண்பாடுகளைக் கொண்ட இவர்கள் ஊழலால் ஒன்று சேர்ந்து, தங்களின் குடுமியை அமித்ஷாவிடம் கொடுத்து, N.D.A. டப்பா எஞ்சினில் இன்றைக்கு வந்திருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு கிடைத்திருக்கும் பிரச்சார யுக்தி என்பது, அவதூறு பரப்புவது! பொய்களைப் பேசுவது! மக்களைப் பிளவுப்படுத்துவது!

> “இன்றைக்கு, நாங்கள் கொள்கைக் கூட்டணியோடு வந்து வாக்கு கேட்கிறோம். இன்னொரு பக்கம், பா.ஜ.க.வும் – அ.தி.மு.க.வும் உங்களிடம் வாக்கு கேட்டு வருகிறார்கள். ஆனால், அவர்களால் தமிழ்நாட்டிற்கும் – தமிழ்நாட்டு மக்களுக்கும் என்னென்ன நன்மைகள் செய்திருக்கிறார்கள் என்று ஏதாவது சொல்ல முடிகிறதா? எந்தக் கொள்கையை அடிப்படையாக வைத்து கூட்டணி அமைத்திருக்கிறார்கள் என்று வெளிப்படையாகச் சொல்ல முடியாத நிலை இன்றைக்கு அவர்களுக்கு! கூட்டணியாக இருந்தாலும் அதில் பல பேர் பழனிசாமியை ஏற்றுக் கொள்ள மாட்டோம்; N.D.A.தான் எங்கள் முகம் என்று சொல்கிறார்கள்!”

கொள்கைகளையும் – சாதனைகளையும் நெஞ்சை நிமிர்த்தி முழங்கும் நம்கூட்டணி!

ஆனால், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி என்பது, கொள்கைகளையும் சாதனைகளையும் மேடைக்கு மேடை நெஞ்சை நிமிர்த்தி முழங்கும் கூட்டணி!

தொடர்ச்சி 7–ஆம் பக்கம்